தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 8, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு 2024

1993 ஏப்ரல் 21– புதன் கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடுகள்)

'' ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.'' (குறுக்கீடுகள்).

முறைப்படியான வழியில் தொடங்கி செய்யப்படாத முயற்சி பலர் துணையாக நின்று அதனைக் காப்பாற்றினாலும் அது குற்றம் குறை உள்ளதாகவே முடியும். (குறுக்கீடுகள்).

1. வினா-விடை நேரம் துவங்குவதற்கு முன்னரேயே எதிர்க்கட்சியினர் ஒரு பிரச்சினையை எழுப்புவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள். (குறுக்கீடுகள்) வினாக்கள்-விடைகள். எதிர்க்கட்சித் தலைவர், மற்ற உறுப்பினர்கள் அமர வேண்டும். வினாக்கள்-விடைகள் நேரத்தில் வேறு எதுவும் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்ததற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய கருத்தைச் சொல்ல நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) இப்போது வேண்டாம். (குறுக்கீடு) இப்போது வேண்டாம். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இது முறையல்ல (குறுக்கீடு) வினாக்கள்-விடைகள் நேரத்தில் வேறு எதுவும் எடுத்துக்கொள்ள இயலாது. (குறுக்கீடுகள்). வினாக்கள்-விடைகள் நேரத்தில் வேறு அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டுமானால், பேரவையில் ஒரு தீர்மானம் வினாக்கள்-விடைகளை ஒத்திவைப்பதற்காக நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்). நீங்கள் என்ன பிரச்சினை சொன்னாலும் நான் வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்ததற்குப் பிறகு உங்களைக் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு இது தெரியாதது அல்ல. (குறுக்கீடுகள்) எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்ததற்குப் பிறகு எடுத்துக்கொள்வதைத்தான் நம்முடைய மரபாக வைத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்).

 வினா–விடை நேரம் துவங்குவதற்கு முன்னரேயே எதிர்க்கட்சியினர் ஒரு பிரச்சினையை எழுப்புவது குறித்து.

[பேரவைத் தலைவர்] [1993 ஏப்ரல் 21

என்னுடைய முழு ஒத்துழைப்பும் உங்களுக்கு உண்டு. (குறுக்கீடுகள்) என்னுடைய முழு ஒத்துழைப்பும் உங்களுக்கு உண்டு. தயவுசெய்து உட்காருங்கள்.(குறுக்கீடுகள்) ஜனநாயகத்தின் முறை துளி கூட வழுவாமல்தான் இதுவரையிலும் பேரவையை நடத்திக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கும் அப்படியே நான் நடத்த வேண்டும், விதிமுறைகள் துளி கூட மாறாமல் நடத்த வேண்டும் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இது முறை அல்ல. (குறுக்கீடுகள்) தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்). இது வினாக்கள்-விடைகள் நேரம். (குறுக்கீடுகள்) இந்த நேரத்தில் எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் எடுத்துக்கொள்வது முறையல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவர்களுடைய உறுப்பினர்களும் (குறுக்கீடுகள்) எனக்கு ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் பேரவையின் சார்பில்தான், பேரவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பில்தான் இந்த இடத்திலே அமர்ந்து என்னுடைய அலுவல்களைக் கவனிக்கிறேன். விதி முறைகளை எனக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அந்த விதிமுறைகளின்படிதான் நடக்க வேண்டும். (குறுக்கீடுகள்) எனக்கு என்று எந்த விதிமுறையும் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கிற விதிமுறைகளின்படிதான் நடக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) அந்த விதிமுறைகளின்படி நான் நடக்கிறேன். (குறுக்கீடுகள்) தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. தம்புசாமி,பழனிசாமி, நீங்கள் நல்ல உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் எப்போதும் விதிமுறைகளுக்கு மாறாக நடக்கக் கூடாது என்று சொல்லுவீர்கள். (குறுக்கீடுகள்) திரு. பண்ருட்டிஇராமச்சந்திரன், அவர்கள் விதிமுறைகளை மிக நன்றாக எனக்கு அவ்வப்போது சுட்டிக் காட்டுவீர்கள்.(குறுக்கீடுகள்)நீங்கள் இதிலே இப்படித் தலையிடுவது நல்லது அல்ல (குறுக்கீடுகள்) நல்ல உறுப்பினர்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவ்வப்போது விதிகளிலே இருக்கிற நுணுக்கங்களை எல்லாம் எடுத்துச் சொல்கிறவர். (குறுக்கீடு) நான் உங்களை மிகுந்த மரியாதையோடுதான் நடத்துகிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களுடைய கருத்தின்படியே அவையை நடத்திக்கொண்டு இருக்கிறவன். (குறுக்கீடுகள்) ஆகவே, இதில் நான் விதிமுறைகளுக்கு மாறாக நடக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டாம். (குறுக்கீடுகள்) விதிமுறைகளின்படி நடக்க வேண்டும் என்று அவ்வப்போது வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறவர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) அந்த விதி முறைகளுக்கு மாறாக நடவுங்கள் என்று நீங்களே என்னைச் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்).

277 வினா-விடை நேரம் துவங்குவதற்கு முன்னரேயே எதிர்க்கட்சியினர் ஒரு பிரச்சினையை எழுப்புவது குறித்து

1993 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 10-05

மரியாதைக்குரிய மூத்த உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள், எல்லா உறுப்பினர்களுக்கும் நீங்கள் தான் பதவிப் பிரமாணம் செய்து வைத்து அமர்த்தி வைத்தீர்கள். நீங்களே இந்த அளவுக்கு (குறுக்கீடுகள்) அவர்கள் இருந்து (குறுக்கீடுகள்) நான் அதை வேண்டுமானால் மாற்றிக்கொள்கிறேன். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் மூத்த உறுப்பினருடைய தலைமையில் நான் பதவி ஏற்றதற்குப் பிறகு, அவர்கள் தலைமை ஏற்ற அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவை முன்னவர் அவர்களும் என்னை அமர்த்தி வைத்தீர்கள். அமர்த்தி வைத்த நீங்கள் இரண்டு பேருமே எனக்குத் துணை இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அமர்த்தி வைத்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும் தான் எனக்குத் துணையாக எப்போதும் இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) குறிப்பாக இப்படிப்பட்ட நேரங்களில் நீங்கள்தான் துணை இருக்க வேண்டும். நீங்களே இந்த அளவுக்கு அவைவிதிகளுக்கு மாறாக நடக்கவேண்டும் என்றுஎண்ணி வற்புறுத்துவது போல் எழுந்து நிற்கக் கூடாது. (குறுக்கீடுகள்). தயவுசெய்து அமர வேண்டும். (கூச்சல்-குழப்பம்) தயவுசெய்து அமர வேண்டும். (குறுக்கீடுகள்). நீங்கள் எனக்கு விதிகளைக் கொடுத்திருக்கிறீர்கள். விதிகளின்படி பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் மட்டும் தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும்கூட இதுவரையிலேயும் அவை மரபில் பேரவைத் தலைவர் வந்து அவையை வணங்கிய உடனேயே சத்தமிட்ட வரலாறே இல்லை. (குறுக்கீடுகள்) இன்றைக்கு அதையும் ஆரம்பித்தீர்கள். நான் திருக்குறள் படித்தேன். நான் திருக்குறள் படிக்கிற நேரத்திலும் அமைதி காக்கவில்லை. அதன் பின்னர் வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்கின்றபோது இப்படிச் செய்வது முறையல்ல. வேறு வகையில் அதற்கு ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டு அது ஒத்திவைக்கப்பட்டாலன்றி, (குறுக்கீடுகள்) இதுவரையிலேயும் எந்தப் பிரச்சினையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை) எடுத்துக்கொண்ட நேரங்களிலே கூட, வினாக்கள்-விடைகளை ஒத்திவைக்காமல் எடுத்தது தவறு என்று இங்கே வாதிடப்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் எனக்கு ஒத்துழைக்க வேண்டும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் நீங்கள் அந்த நேரத்தில் எழுப்பலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த விதிமுறைகளின்படிதான் நான் நடக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் சொல்வதைப் போல ஒன்றிரண்டு நேரங்களில் அவ்வாறு எடுத்துக் கொண்டது தவறு என்று இங்கேயே வாதிடப்பட்டு இருக்கிறது. ஒன்றிரண்டு நேர்வுகளில் கேள்வி நேரத்தை ஒத்திவைக்கின்ற தீர்மானம் நிறைவேறாமல் வேறு பிரச்சினைகளை எடுத்துக்கொண்டது தவறு என்று வாதிடப்

பட்டிருக்கிறது. கேள்வி நேரம் என்பது மிக இன்றியமையாதது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அறியாதது அல்ல. (குறுக்கீடுகள்) எனக்கு ஒத்துழைக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன், திரு. பழனிசாமி, திரு. தம்புசாமி ஆகியவர்கள் எப்போதும் விதிமுறைகளின்படி நடக்க ஒத்துழைப்புக் கொடுத்து வந்திருக்கிறீர்கள். நீங்கள் தயவுசெய்து அமர வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் எப்போதும் எனக்கு ஒத்துழைப்புக் கொடுத்து வந்திருக்கின்ற உறுப்பினர்கள். மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப்பேச வேண்டும் என்று பல நேரங்களில் வற்புறுத்தி வந்திருக்கின்ற உறுப்பினர்கள். இந்த நேரத்தில் வேறு எந்தப் பிரச்சினையையும் எழுப்ப வேண்டாம். கேள்வி நேரம் முடிந்தவுடன் நான் அனுமதிக்கிறேன். அது தான் மரபு. அதுதான் விதி. (குறுக்கீடுகள்). இல்லை, வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைக்கின்ற தீர்மானம் நிறைவேறியிருக்கிறது, அப்படி ஒத்திவைக்கின்ற தீர்மானம் நிறைவேறியதற்குப் பிறகு தான் ஒரு மணி நேரம் அல்ல, இரண்டு மணி நேரம் கூட பிரச்சினை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை. விதிமுறைகளின்படி நடக்க வேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பம். (குறுக்கீடுகள்) இல்லை, விதிமுறைகளின்படி நான் நடக்க வேண்டியவன். (குறுக்கீடுகள்) இல்லை, அது முறையல்ல. நான் விதிமுறைகளின்படி நடக்க வேண்டும். (குறுக்கீடுகள்) யாராவது, கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டும் என்றுகூட நீங்கள் எனக்கு ஒரு கோரிக்கை வைத்திருக்கலாம். அதை நான் பேரவை முன்னவருக்கு அனுப்பித் தீர்மானத்தை முன்மொழியச் செய்திருப்பேன். ஆனால், அப்படிக் கோரிக்கையையும் என்னிடத்தில் நீங்கள் யாரும் வைக்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் நேற்று பேரவை முடிந்ததிலிருந்து இப்போது வருகிற வரையிலேயும் என்னுடைய அறையிலேயேதான் இருந்தேன். (குறுக்கீடுகள்). (முற்றாகல் 10-10)

எனவே அந்தக் கோரிக்கையைக்கூட (குறுக்கீடுகள்) நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கலாம். எனவே, இதிலே மரபை மீறி. விதிமுறைகளை மீறி நான் நடக்கவேண்டுமென்று வற்புறுத்தாதீர்கள்; விதிமுறைகளுக்குப் புறம்பாக நான் நடக்கவேண்டுமென்று வற்புறுத்தாதீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இதை வற்புறுத்தாதீர்கள் (குறுக்கீடுகள்) இல்லை என்று சொன்னால் நான் நடவடிக்கை எடுத்துத்தான் பிறகு பேரவையை நடத்த வேண்டியிருக்கும் (குறுக்கீடுகள்) இல்லை; இல்லை; எனக்கு இருக்கிற ஆப்ஷன் அதுதான். நான் விதிமுறைகளின்படி நடக்கிறபோது, விதிமுறைகளின்படி என்னை நடத்தவிடாமல் நீங்கள் தடுக்கிறபோது நான் பிறகு விதிமுறைகளின்படி நடவடிக்கைதான் எடுக்க வேண்டிவரும். நான் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்

அவர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவையில் நின்று கொண்டிருக்கிற உறுப்பினர்கள் அனைவரும், நான் பெயர் சொல்லியே அழைக்கிறேன், உட்காரவேண்டும். இல்லை என்று சொன்னால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (கூச்சல் குழப்பம்) நான் பெயர் சொல்லியே அழைக்கிறேன், உட்கார வேண்டும். (கூச்சல்—குழப்பம்) தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இங்கே நின்று கொண்டு இருக்கிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கிறேன், உட்காரவேண்டும். (கூச்சல்—குழப்பம்) அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். பெயரைக் குறிப்பிடுகிறேன். நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் நின்று கொண்டிருக்கிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லிக் குறிப்பிடுகிறேன். உட்கார வேண்டும். (கூச்சல்—குழப்பம்) அல்லது நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் அவையை விட்டு வெளியேறவேண்டுமென்று குறிப்பிடுகிறேன். (கூச்சல்—குழப்பம்) திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் அவையை விட்டு வெளியேறவேண்டும். (கூச்சல்-குழப்பம்) இது முறையல்ல; அவையை விட்டு வெளியேறவேண்டுமென்று நான் குறிப்பிடுகிறபோது தாங்கள் நின்று கொண்டிருப்பது முறையல்ல (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சி தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் அவையை விட்டு வெளியேறவேண்டும்; திரு. டேனியல்ராஜ் அவையை விட்டு வெளியேறவேண்டும். திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் அவையை விட்டு வெளியேறவேண்டும். நின்று கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவையை விட்டு வெளியேறவேண்டும். (கூச்சல்-குழப்பம்) மார்ஷல், திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் மற்றும் திரு. டேனியல்ராஜ், ஏனைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரையும், நின்று கொண்டிருக்கிற அனைவரையும் பேரவையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று கட்டளையிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்) எல்லோரையும் வெளியேற்றலாம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் மற்றும் நின்று கொண்டிருக்கிற அனைவரையும் பெயர் சொல்லி அழைக்கிறேன். தயவுசெய்து வெளியேற்ற வேண்டும். (கூச்சல்-குழப்பம்) காவலர்களை திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் மிரட்டுவது சரியல்ல. அது அவர்கள் கடமையை ஆற்ற விடாமல் தடுப்பதாகப் பொருள். நான் உத்தரவிட்டிருக்கிறேன். நான் உத்தரவிட்டிருக்கிறபோது அவர்கள் வெளியேற்றுவார்கள்.

(கூச்சல்-குழப்பம்) அவர்கள் வெளியேற்றுவதைத் தடுப்பது அலுவலர்களுடைய கடமையைச் செய்யத் தடுக்கிறீர்கள் என்று பொருள்படும். நான் கட்டளையிட்டிருக்கிறேன்; என்னுடைய கட்டளையை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். (கூச்சல்-குழப்பம்) அதேபோல் நின்று கொண்டிருக்கிற எல்லா உறுப்பினர்களையும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றலாம். (கூச்சல்-குழப்பம்).

(திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்,

[முற்பகல் 10-15]

மற்ற உறுப்பினர்கள் தயவுசெய்து அமரக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) பேரவைக் காவலர்களால் வெளியேற்றப் பட்டுக் கொண்டிருக்கிறவர்கள் விசில் அடித்துக்கொண்டு செல்கிறார்கள் என்பதை அவையினர் இப்பொழுது கவனித்து இருக்கிறீர்கள். அது எந்த அளவுக்கு இந்த அவையின் கண்ணியத்தையும் மாண்பையும் பாதிக்கிற செயல் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அத்தகைய செயலை காங்கிரஸ் கட்சியினர் இப்பொழுது விசில் அடித்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதைப் பேரவை இப்பொழுது பார்க்கிற பார்வையிலிருந்தே எந்த அளவுக்கு கண்ணியத்தைக் காத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். இதைப் பத்திரிகையாளர்களும் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். வெளியேற்றப்படுகிறபோது, அவையிலேயிருந்து விசில் அடித்த இந்தச் சம்பவத்தையும் நீங்கள் பார்ப்பீர்களேயானால்.... (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதி நீங்கள், காவலர்கள் மற்ற உறுப்பினர்களை வெளியேற்றுகிற பொழுது, காவலர்களோடு இந்த அளவுக்கு மோதுவது சரியல்ல, இது முறையல்ல. பரிதி இளம்வழுதி அவையைவிட்டு வெளியேற வேண்டும். பரிதி இளம்வழுதியையும் வெளியேற்றக் கேட்டுக் கொள்கிறேன். காவலர்கள் அவரை வெளியேற்றவும்.

(திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப் பட்டார்)

திரு. இராமச்சந்திரன் அவர்கள், திரு. தம்புசாமி அவர்கள், திரு. பழனிசாமி அவர்கள், திரு. திருநாவுக்கரசு அவர்கள், அவர்களுக்குச் சொன்னதைத்தான் உங்களுக்கும் சொல்லுகிறேன். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தின்போது இத்தகைய, விதிமுறைகளுக்கு மாறான செயல்களை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. கேள்வி நேரம் முடிந்தவுடன் உங்களை நான் அனுமதிக்கிறேன். நீங்கள் தெரிவிக்கிற கருத்

துக்களை நீங்கள் அப்பொழுது முறையாகத் தெரிவிக்கலாம். (குறுக்கீடுகள்) கேள்வி நேரம் முடிந்தவுடன் உங்களுக்கு நான் அனுமதி அளிக்கிறேன். திரு. தம்புசாமி அவர்கள், திரு. பழனி சாமி அவர்கள், கேள்வி நேரம் முடிந்தவுடன் உங்களுக்கு நான் அனுமதி அளிக்கிறேன். எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந் தாலும் இந்தப் பேரவையில், கேள்வி நேரம் முடிந்தவுடன் தான் எழுப்பப்பட்டிருக்கிறது. கேள்வி நேரத்திற்கு முன்னர் இதுபற்றி எழுப்பப்படவேண்டுமென்று சொன்னால், கேள்வி நேரத்தை ஒத்திவைப்பதற்கான தீர்மானம் முன்மொழிய நீங்கள் கேட்டிருக்க வேண்டும். நீங்கள் யாரும் அப்படிக் கேட்க வில்லை, ஆகவே, கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் பேரவை முன்னவரைக் கேட்க முடியவில்லை. நீங்கள் கேட்டு இருப்பீர்களேயானால், அதைக்கூட நான் முதலிலே செய்திருக்க முடியும். எனவே, இப்பொழுது வேண்டாம், அவர்களுக்குச் சொன்னதைத்தான் உங்களுக்கும் சொல் லுகிறேன். திரு. திருநாவுக்கரசு அவர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு அவர்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடு)

முற்பகல் 10-20

தயவுசெய்து திருநாவுக்கரசு அவர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) அது கேள்வி நேரம் முடிந்தவுடன்தான், (குறுக்கீடு) கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகுதான், நேற்றைய கன்டி னியுட்டி தொடர்கிறது. (குறுக்கீடு) திரு. பழனிசாமி அவர்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. கேள்வி நேரத்தை ஒத்திவைக்காத சூழ்நிலையில் நீங்கள் எழுப்புகிற எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் விதிமுறைகளின்படி நடக்கிற உறுப்பினர்கள், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) வேண்டாம். இது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. இந்த நேரத்திலே வேண்டாம். இல்லை என்றால் எதிர்க்கட்சித் தலைவருக்கு என்ன சொன்னேனோ அதுதான் உங்களுக்கும். (குறுக்கீடு) பழனிசாமி, நான் விதிமுறை களின்படி நடக்க வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றம் என்பது விதிமுறைகளின்படி, அரசியல் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட அமைப்பு, அந்த விதிமுறைகளின்படியும், அரசியல் சட்டம் வகுத்துக் கொடுத்திருக்கிற நெறிமுறைகளின்படியும் தான் நான் நடக்க முடியும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள், வேறு அலுவல்களுக்குச் செல்லலாம். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராமச்சந்திரன், கண்ணி யத்தைக் காக்க வேண்டுமென்பதுதான் இப்பொழுது இது வரையிலே நடந்த சம்பவமே (குறுக்கீடு) தயவுசெய்து வேண்டாம். (திரு. ச. இராமச்சந்திரன் வெளியேறினார்) திரு. பழனிசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்கார வேண்டும்.

எதிர்க்கட்சியினர் ஒரு பிரச்சினையை எழுப்புவது குறித்து.

[பேரவைத் தலைவர்] [1993 ஏப்ரல் 21

வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபிலேயும் இருக்கக் கூடாது என்பது விதிமுறை. லாயிலே இருந்து கூச்சல் போடுகிற உறுப்பினர்களை அப்புறப்படுத்த காவலர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திருநாவுக்கரசு, நேற்றையதினமே தாங்கள் விதிமுறைகளை மீறிப் பேரவைத் தலைவரவர்களைப் பார்த்து ஒருமையில் பேசியதற்காக வெளியேற்றப்பட்டவர். (குறுக்கீடு) தொடர்ந்து பேரவைத் தலைவரவர்களைப் பார்த்து ஒருமையிலே பேசுவதற்கு எந்த விதி சொல்லும்? அந்த அளவிற்கு ஒருமையிலே பேசியதால் நேற்றைய தினமே வெளியேற்றப்பட்டீர்கள். இன்றைய தினமும் அதே முறையில் வரம்பு மீறி நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் வெளியேற உத்தரவிடுகிறேன். திருநாவுக்கரசை வெளியேற உத்தரவிடுகிறேன். தொடர்ந்து விதி முறைகளுக்கு மாறாக வரம்பு மீறி நடந்து கொண்டிருந்த அந்த உறுப்பினரை இப்பொழுது வெளியேற உத்தரவிடுகிறேன். காவலர்கள் திருநாவுக்கரசை வெளியேற்றலாம். (குறுக்கீடுகள்).

(திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்).

திரு. தம்புசாமி, திரு. பழனிசாமி, வேண்டாம். கேள்வி நேரம் முடிந்தவுடன் உங்களுக்கு நான் அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) கேள்வி நேரம் முடிந்தவுடன் உங்கள் இருவருக்கும் அனுமதி தருகிறேன். நிறையப் பிரச்சினைகளை நானும் சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே, கேள்வி நேரத்தின்போது வேண்டாம். கேள்வி நேரம் முடிந்தவுடன் நானும் நிறையச் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்பொழுது நீங்கள் இதைக் கிளப்பலாம். நீங்கள் கிளப்பினால் உங்களுக்கு அனுமதி தருகிறேன். நீங்களும் போதுமான அளவிற்குப் பேசலாம். இந்தப் பிரச்சினை என்ன என்பதையும், பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதையும் கேள்வி நேரம் முடிந்தவுடன் சொல்லி உங்களுக்கும் வாய்ப்பு அளிக்கிறேன். அந்த நேரத்தில் நானும் பதில் தருகிறேன். (குறுக்கீடு) பழனிசாமி, தயவுசெய்து வேண்டாம். உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்தவுடன் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்).

திரு. பழனிசாமி, திரு. தம்புசாமி ஆகிய இருவரும் அவையை விட்டு வெளியேறக் கேட்டுக் கொள்கிறேன். அவையை விட்டு வெளியேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், வெளியேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியினர் ஒரு பிரச்சினையை எழுப்புவது குறித்து.

1993 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

தயவு செய்து வெளியேற வேண்டும், தயவுசெய்து வெளியேற வேண்டும். (குறுக்கீடு).

முற்பகல் 10–25

திரு. ஜி. பழனிசாமி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தாங்கள் வெளியேற வேண்டும், வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிற போது, மேற்கொண்டு பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) விதிமுறைகளுக்குப் புறம்பாக நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள். கேள்வி நேரத்தை எடுக்கவிடாமல் தடுத்து நின்று கொண்டிருக்கிற காரணத்தால் நான சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் ரொம்ப வரம்புமீறிப் போகிறீர்கள் என்று கூட நான் சொல்லவில்லை (குறுக்கீடு) கேள்வியை எடுக்கவிடாமல் நீங்கள் தடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால் நான் சொல்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; விதிமுறைகளின்படிதான் சொல்கிறேன். கேள்வியை எடுக்கவிடாமல் நீங்கள் தடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால், வெளியேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாச் சட்டமன்றங்களிலும் இருக்கிற விதிகள்தான், நம்முடைய சட்டமன்றத்திற்கும். அந்த விதிமுறைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் பேரவைத் தலைவருடைய நோக்கம். (குறுக்கீடுகள்)

திரு. பழனிசாமி அவர்களையும், திரு. தம்புசாமி அவர்களையும் நான் வெளியேற வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், நின்றுகொண்டிருப்பது, நல்ல உறுப்பினர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற அவர்கள் இரண்டு பேருக்கும் அழகல்ல, (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி அவர்களை அவையைவிட்டு காவலர்கள் வெளியேற்றக் கேட்டுக் கொள்கிறேன். திரு. தம்புசாமி அவர்களையும் காவலர்கள் வெளியேற்றக் கேட்டு கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

எதிர்க்கட்சியினர் ஒரு பிரச்சனையை எழுப்புவது குறித்து

[1993 ஏப்ரல் 21

(உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, திரு. வே. தம்புசாமி ஆகியோர், பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)

காவலர்களால் வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியிலே நின்று கொண்டிருக்கிற உறுப்பினர்கள் இப்படி மிரட்டிக் கொண்டிருப்பது சரியல்ல காவலர்களோடு மோதுவது என்பது, அலுவலர்கள் தங்களுடைய பணியைச் செய்யவிடாமல் தடுக்கிற கிரிமினல் குற்றமாகும். எனவே, காவலர்களைத் தடுப்பது முறையல்ல. காவலர்களை, தங்கள் கடமையைச் செய்யவிடாமல் தடுக்கிற உறுப்பினர்களை, அங்கேயிருந்தும் வெளியேற்றப்பட வேண்டிவரும். பேரவையிலே இருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் என்பவர்கள், பேரவைக்கு எல்லா வகையிலேயும் புதியவர்கள் 'strangers' என்றுதான் கருதப்படும். அவர்கள் லாபியிலே இருப்பது என்பதுகூட 'strangers' —எப்படி நம்முடைய லாபியிலே வந்து நின்று கொண்டிருந்தால் அது தண்டனைக்குரிய குற்றமோ, அதேபோன்று குற்றமே—லாபிலேயே இப்போது இங்கே என்னால் வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் இருப்பதும் குற்றமாகும். அப்படிப்பட்ட 'strangers'-ஐ காவலர்கள் வெளியேற்றுவார்கள். அது தவறில்லை. எனது காவலர்களை லாபியிலே, இங்கிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் தாக்குவதாகக் கேள்விப்படுகிறேன். காவலர்களைத் தாக்குவது என்பது முறைகேடானது; கிரிமினல் குற்றமாகும். அதுவும், பணியில் இருக்கிற காவலர்களைத் தாக்குவது என்பது மிகப்பெரிய கிரிமினல் குற்றமாகும். அதற்குரிய நடவடிக்கைகளைக்கூட, அப்படித் தாக்கிய உறுப்பினர்கள் எதிர்நோக்க வேண்டிவரும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். They are discharging their official duties. அந்த நேரத்தில், அவர்களைத் தாக்குவது என்பது மிகப்பெரிய குற்றமாகும்.

காவலர்களைத் தாக்கிய குற்றத்திற்கு ஆளாக வேண்டிவரும். வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள், தற்போது பேரவை வளாகத்திலே இருப்பது 'strangers' செய்கிற குற்றமாகும். அந்தக் குற்றத்தைச் செய்கிற எவராக இருந்தாலும் அதற்குரிய தண்டனையை எதிர்நோக்க வேண்டிவரும்.

பேரவையினுடைய காவலர்களை, வெளியே இருக்கிற சிலர் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது கேள்வி நேரம் மிக இன்றியமையாதது. ஆனால், காவலர்களை இங்கே தாக்குகிறபோது, அதன் நடவடிக்கை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே, இந்தப் பிரச்சினையைக் கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக் கொள்ள இருக்கிறேன். காவலர்களைத் தாக்கியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது போன்ற பிரச்சினைகளை, கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்ள இருக்கிறேன்.